# அரச கணக்குகள் திணைக்களம்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை

2025

# உள்ளடக்கம்


**அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு**

| | | |
|---|---|---|
| 1.1 | அறிமுகம் | **1** |
| 1.2 | நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் | **1 - 2** |
| 1.3 | பிரதான செயற்பாடுகள் | **2 - 3** |
| 1.4 | திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் | **3 - 4** |
| 1.5 | அமைப்பு ரீதியான கட்டமைப்பு | **4 - 5** |

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**

| | | |
|---|---|---|
| 2.1 | புதிய கணினி மயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு முறைமை (New CIGAS) | **5 - 4** |
| 2.2 | ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) | **7 - 9** |
| 2.3 | நிதி அறிக்கையிடல மற்றும் கணக்கியல் கொள்கை | **9 - 12** |
| 2.4 | அரசாங்க சம்பள மென்பொருள் | **12** |
| 2.5 | அரசாங்க நிதி புள்ளி விபரவியல் (GFS) மற்றும் நிதியியல் சாரா சொத்து கணக்கீடு | **13 - 14** |
| 2.6 | நிதி, வைப்புக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு. | **15 - 17** |

**அத்தியாயம் 03 - 2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | **18** |
| 3.2 | நிதி நிலைமைக் கூற்று | **19** |
| 3.4 | காசுப் பாய்ச்சல் கூற்று | **20** |
| 3.5 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | **21 - 22** |
| 3.6 | வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை | **23** |
| 3.7 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் | **23** |
| 3.8 | நி.ஓ.208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுகளின்/ திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள் | **23** |
| 3.9 | நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை | **24** |
| 3.10 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | **25 - 30** |

**அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்**

| | | |
|---|---|---|
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில்) | **31 - 38** |

**அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 5.1 | அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் | **39** |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றி மற்றும் சவால்கள் | **39** |

**அத்தியாயம் 06 - மனித வள விபரம்**

| | | |
|---|---|---|
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | **40** |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம் | **40 - 41** |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | **41 - 43** |

**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை** **44 - 55**

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

அரச கணக்குகள் திணைக்களம் இலங்கையில் அரசிறை அறிக்கையிடல் சம்பந்தமான முக்கியமான பணியொன்றை நிறைவேற்றுகின்ற அதேவேளையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. அரசிறை முகாமைத்துவத்தை மிகவும் பயன்மிக்க மற்றும் வினைத்திறன் மிக்க விதத்தில் நடைமுறைப் படுத்துவதற்காக அரசிறை அறிக்கையிடல் சம்பந்தமாக தேவையான கொள்கைகளை வகுப்பதில் தேவையான ஒத்துழைப்பை வழங்கி மிகவும் வெளிப்படை தன்மையுடனும் செம்மைத் தன்மையுடனும் அரசிறை அறிக்கையிடல் ஒன்றை பேணி வருவது சம்பந்தமாக தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி அரசிறை அறிக்கையிடலில் ஒருமைப்பாட்டை பாதுகாப்பது இந்த திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரசாங்கத்திற்கும் தொடர்புடைய தரப்பினர்களுக்கும் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான அரசிறை தகவல்களை அறிக்கையிட்டு சமர்ப்பிக்கும் மத்திய நிறுவனமாக அரச கணக்குகள் திணைக்களம் தொழிற்படுகின்றது.

## 1.2 எமது நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

**நோக்கு**

**அரசிறை நிதி தகவல்கள் தொடர்பில் உன்னத நிலையமாகத் திகழ்வதாகும்.**

**பணிக்கூற்று**

**அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் தீர்மானம் எடுக்கும் செயல்முறைக்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்குவதற்காக மையப்படுத்தப்பட்ட கணினிமய நிதித் தகவல் தளமொன்றைப் பேணிவருதல் மற்றும் அரசாங்கத்தின் வருடாந்த ஒருங்கிணைந்த இறுதிக் கணக்குகளைத் தயாரித்து அதனை சகல தரப்பினரும் தெரிந்து கொள்வதற்காக பகிரங்கப்படுத்துதல்.**

## குறிக்கோள்கள்

- **தேசிய வரவுசெலவுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரச நிறுவனங்களுக்கு கணக்கு ரீதியான உதவிகளை வழங்கல்.**
- **துல்லியமானதும் விரிவானதுமான கணக்கீட்டுத் தகவல்களை உருவாக்குவதற்கு சகல கணக்கு அலகுகளிலிருந்தும் தகவல்களைத் திரட்டுவதன் மூலம் கணக்குத் தரவுத் தளம் ஒன்றைப் பேணிவருதல்.**
- **சர்வதேச கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப அரச கணக்குக் கூற்றுகளின் தரத்தை தொடர்ந்தும் விருத்தி செய்தல்.**
- **அரசிறை முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சரியான கணக்கீட்டுத் தகவல் தொகுதி ஒன்றைப் பேணிவருதல்.**
- **இலத்திரனியல் மாதிரிகளில் கணக்கீட்டுத் தகவல்களை தன்னியக்க ரீதியில் உண்டாக்குவதற்கு கணக்கீட்டு அலகுகளில் கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் தொகுதியொன்றை நடைமுறைப் படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்குத் தேவையான உதவியை வழங்குதல்.**
- **உரிய காலத்தினுள் தரமான தீர்மானங்களை எடுப்பதற்கு நிதித் தகவல்களைச் வழங்குதல்.**

## 1.3 பிரதான செயற்பாடுகள்.

1. அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக மத்திய கணக்கீட்டு முறைமையொன்றை பேணிவருதல்.
2. அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றை செயல்படுத்துவதுடன், மாற்றமடைகின்ற தேவைக்குப் பொருத்தமான விதத்தில் அவற்றை இற்றைப்படுத்தல்.
3. கணக்கீட்டு முறைமையைப் பேணிவருவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குதலும், அதற்கேற்ப கணக்கீட்டு பதவியினருக்கு பயிற்சி வசதிகளை வழங்குதலும்.

4. கணக்கீட்டு தகவல்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கும், மத்திய வங்கிக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் ஏனைய அவ்வாறான நிறுவனங்களுக்கும் வழங்குதல்.

5. நியதிச்சட்டமுறைத் தேவைகளுக்கு ஏற்ப வருடாந்தம் அரசாங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

6. அரசாங்கத்தின் சம்பள பட்டியல் தயாரிப்பு மென்பொருளை முறையாகத் தொழிற்படுவதற்குத் தேவையான உதவியை வழங்கல்.

7. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ''பி'' கணக்கு, வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பிரதான கணக்குகளை மேற்பார்வை செய்தல்.

8. வெளிநாட்டு அரசாங்கங்களில் சேவையாற்றிய இலங்கையர்களுக்கு ஓய்வூதிய சம்பளத்தை வழங்குவதற்காக முற்பணக் கணக்கு ஒன்றைப் பேணிவருதல்.

9. அரசாங்க சேவைப் பரஸ்பர சகாயச் சங்க கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் 2(இ) பிரிவுக்கு அமைவாகவும், நிதி ஒழுங்குவிதி இலக்கம் 880-893 அமைவாகவும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணைச் சான்றிதழ்களை வழங்குதல்.

10. அரசிறைப் புள்ளிவிபரக் கையேட்டுக்கு (GFSM2014) அமைவாக அரசிறைப் புள்ளி விபரங்களைத் தயாரித்தல்.

## 1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்.

**1. நிதி முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு.**

- புதிய கணினி மயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு முறைமை (CIGAS)
- ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) மற்றும் துணைச் சேவைகள்
- சம்பள முறைமை மற்றும் உதவிச் சேவைகள் பிரிவு

**2.** கணக்கீட்டுக் கொள்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவு

- நிதி அறிக்கையிடல்
- கணக்கீட்டுக் கொள்கை

3 நிதி, வைப்புக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு

- நிதி முகாமைத்துவம்
- பிரதான பேரேட்டுக் கணக்கு மற்றும் நானாவித கணக்கு

4 நிதித் தகவல் பகுப்பாய்வுப் பிரிவு.

- GFS மற்றும் நிதி சாரா சொத்துக் கணக்கீடு
- மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்

## 1.5 அமைப்பு ரீதியான கட்டமைப்பு



# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அரச கணக்குகள் திணைக்களம், அரசாங்க நிறுவனங்களினால் பொது மக்களின் நிதி சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும் சரியாகவும் கணக்கு வைத்து அறிக்கையிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டல்களை வெளியிடுகின்ற அதேவேளையில், அதனூடாக அரசிறை முகாமைத்துவம் தொடர்பில் பொது மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கியதாக அரசிறை அறிக்கையிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதனூடாக அரசிறை முகாமைத்துவம் தொடர்பில் தேவைப்படுகின்ற தகவல்களை தயாரிப்பதற்கும் இந்தத் திணைக்களம் விசேடமான பணியொன்றை நிறைவேற்றுகின்றது.

கடந்த காலத்தை கவனத்தில் கொள்ளும்போது, இலங்கையில் அரசிறை முகாமைத்துவத்தில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை மேம்படுத்துவதற்காக அரச கணக்குகள் திணைக்களம் குறிப்பிடத்தக்க பணியொன்றை நிறைவேற்றியுள்ளது. இதன்போது வலுவான நிதி அறிக்கையிடல் தொகுதியொன்றைத் தாபித்து உள்ளக நிர்வாகத்தை வலுவூட்டுவதன் மூலம் வரவு செலவுத் திட்ட மேற்பார்வை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல் ஆகியவற்றினூடாக அது மிகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இலங்கையில் அரசிறை அறிக்கையிடலில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தி, நிதி ஒழுக்கத்தை அடைந்து கொள்வதற்கும் இலங்கையில் நீண்ட கால பொருளாதாரத் ஸ்திரத்தன்மை மற்றும் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்காக அரசிறை அறிக்கையிடலை வலுவூட்டுவதினூடாக அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும், நிதி அறிக்கையிடல்களுக்கு புதிய முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கும் அரசிறை அறிக்கையிடல் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக திறன் விருத்தியை அதிகரித்தல் மற்றும் தற்போது காணப்படுகின்ற கணக்கீட்டு செயல்முறைகளை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பாக கவனம் செலுத்தி திணைக்களத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

## 2.1 புதிய கணினிமயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த அரசாங்க கணக்கீட்டு முறைமை (New CIGAS)

அரசிறை தகவல்களை அறிக்கையிடுவதனை மேம்படுத்துதல், வினைத்திறன் மற்றும் அவற்றின் தரத்தைப் பேணிவருதல் ஆகியவற்றின் பொருட்டு எமது திணைக்களத்தின் நிபுணத்துவ அறிவின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட NEW CIGAS மென்பொருளில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தல் 2025 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், புதிய தேவைகள் மற்றும் பயனர்களின் கருத்துரைகளுக்கு அமைவாக NEW CIGAS - கணக்குத் தொகுதியை

தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்வதன் மூலம் இற்றைப்படுத்தப்பட்ட நிதி அறிக்கையிடல் தொகுதியொன்றைப் பேணிவருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாதாந்தம் சகல அமைச்சுகள், திணைக்களங்கள் ஆகியவை தமது நிதியியல் பொழிப்புகளை New CIGAS இணையத்தள செயலிக்கு (Web App) பதிவேற்றம் செய்துள்ளதுடன் (Upload) அதன் பிரகாரம் நிதியியல் தகவல் பயனர்களுக்கு தமது பதிவுகளை பொதுத் திறைசேரியில் பதிவாகியுள்ள கணக்கியல் தகவல்களுடன் ஒப்பீடு செய்து பிழைகளையும் குறைபாடுகளையும் திருத்திக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது.

மேலும் New CIGAS மென்பொருள் பயனர்களிடமிருந்து அறிக்கையிடப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கக்கூடிய விதத்தில் உதவிக் கருமபீட குழு (Help Desk) தொடர்ச்சியாக பயிற்சியளிக்கப்டுவதுடன் மேலதிகமாக, பாவனையாளர்களுக்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் உரிய வேளைக்கு இற்றைப்படுத்ததப்படுகின்றன.

மேலும், சொத்துக்கள் தொகுதியை (module) பயன்படுத்துவது பற்றி உத்தியோகத்தர்களுக்கு Zoom தொழில்நுட்பத்தின் மூலமும், பயிற்சி அமர்வுகளின் மூலமும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது சகல அரசாங்க நிறுவனங்களின் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சொத்துக்களை மாற்றுதல் அதேபோன்று அகற்றுதல் போன்ற பணிகளுக்குரிய முறையான மற்றும் துல்லியமான அறிக்கையிடலை உறுதிப்படுத்தியது.

அதேபோன்று, சகல அரசாங்க அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் பொறுப்புக்களை New CIGAS நிகழ்ச்சித் திட்டத்தினூடாக திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு வசதிகள் வழங்கப்பட்ட அதேவேளையில், அந்த பொறுப்புக்களை New CIGAS ,ணையதள செயலிக்கு (Web App) பதிவேற்றம் செய்வதினூடாக மீண்டும் அவற்றின் செம்மைத் தன்மையை பயனர்களுக்கு பரிசீலனை செய்யக்கூடிய விதத்தில் வசதிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, பயனர்களினால் மீண்டும் மீண்டும் செய்யப்பட்ட பல தவறுகளை அடையாளங் கண்டு, அந்த தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்காக மென்பொருள்களின் பாதுகாப்பு முறைமைகளும் மேம்படுத்தப்பட்டன.

2025 ஆம் ஆண்டில் 350 உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய சுருக்கமான அறிக்கை பின்வருமாறு.

| | இடம் | கால எல்லை | நிறுவனம் | பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|
| 01 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.09.10 | வடமேல் மாகாணசபை (Zoom ஊடாக ) | 60 கணக்காளர்கள் மற்றும் விடய அலுவலர்கள் |

| | இடம் | கால எல்லை | நிறுவனம் | பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் பற்றிய விபரம் |
|---|---|---|---|---|
| 02 | இலங்கை கடற்படைத் தலைமையகம் | 2025.09.03 | New CIGAS தொடர்பான பயிற்சிநெறி | 15 கணக்காளர்கள் மற்றும் விடய அலுவலர்கள் |
| 03 | மெட்ரோபொலிடன் கெம்பஸ் (மிலோதா நிறுவனம்) | 2025.10.16 முதல் 2025.10.17 வரை | இலங்கை கடற்படை | 94 கணக்காளர்கள் மற்றும் விடய அலுவலர்கள் |
| 04 | இலங்கை தரைப்படை | 2025.10.22 | இலங்கை தரைப்படை | 38 கணக்காளர்கள் மற்றும் விடய அலுவலர்கள் |
| 05 | பொலீஸ் பயிற்சிக் கல்லூரி (களுத்துறை) | 2025 நவம்பர் 14, 15, 21, 22 ஆம் திகதிகளில் | இலங்கை பொலீஸ் | 143 கணக்காளர்கள் மற்றும் விடய அலுவலர்கள் |

## 2.2 ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS)

2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 541 செலவின அலகுகளை கொண்டிருக்கும் 08 செலவினத் தலைப்புகளுக்கான ITMIS முக்கிய தொகுதியை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதன்படி, மத்திய அரசுக்குச் சொந்தமான அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விஷேட செலவினப் பிரிவுகள் ITMIS அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த முறைமையின் தொடக்கத்தில், 5,000 பெயரிடப்பட்ட பயனர் உரிமங்கள் பெறப்பட்டன. அந்தப் பயனர் உரிமங்களுடன் 850 செலவின அலகுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 164 செலவினத் தலைப்புகள் இதில் இணைக்கப்பட்டன. 2025-ஆம் ஆண்டில், மீதமுள்ள 08 செலவினத் தலைப்புகளை இணைப்பதற்காக, பெயரிடப்பட்ட பயனர் உரிமங்கள் ஒருங்கே பயன்படுத்தும் பயனர் உரிமங்களாக மாற்றப்பட்டன. அதன்படி, அரச கணக்குகள் திணைக்களமானது அனைத்து வரவுசெலவுத் திட்டத் தலைப்புகளுக்குமான முக்கிய தொகுதிகள் மீதான பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தது. 2025-ஆம் ஆண்டின் இறுதியில், வெளிவிவகார அமைச்சு மற்றும் அதன் 63 வெளிநாட்டுத் தூதரகங்கள் உட்பட, 1,391 செலவின அலகுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 172 செலவினத் தலைப்புகள், நேரடிச் சூழலில் பணியாற்ற ஏதுவாக இதில் இணைக்கப்பட்டுள்ளன.

அனைத்து நிறுவனங்களும் தங்களின் கட்டுநிதி தேவைகளை ITMIS அமைப்பு மூலம் பூர்த்தி செய்கின்றன. மேலும், இந்த நிறுவனங்கள் தினசரி உள்ளிடும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளின் அடிப்படையில், திறைசேரித் செயல்பாடுகள் திணைக்களம் பணம் /கட்டுநிதி தேவைகளைத் தீர்மானித்து, அதற்கேற்ப கட்டுநிதிகளை விடுவிக்கிறது.

இந்த அமைப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 4,708 பயனர்களுக்கு, ஒவ்வொரு 4 நாட்கள் கொண்ட 6 பயிற்சி அமர்வுகளாக, நிகழ்நிலை தளம் (Zoom) வழியாக முக்கிய தொகுதிகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், புதிதாகப்

பணியமர்த்தப்பட்ட, இடமாற்றம் செய்யப்பட்ட மற்றும் ராஜினாமா செய்த பணியாளர்களில் 162 பேருக்கு முக்கிய தொகுதிகள் தொடர்பான நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் (IMF) இடையேயான ஒரு ஒப்பந்தத்தின் படி, பயனர் நிறுவனங்களால் பெறுகை கட்டளைகள் மற்றும் விலைப் பட்டியல்களைப் பெற்ற 15 நாட்களுக்குள் அவற்றை கணினி அமைப்பில் பதிவு செய்யும் பணி 2025 செப்டம்பர் முதல் தொடங்கியது. மேற்குறித்த பணியை இணங்கும் வகையில், அரச கணக்குகள் திணைக்களம் 2025 ஜூலை 17 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 02/2025-ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய அனைத்து பயனர்களுக்கும் நிகழ்நிலை முறை (Zoom) மூலம் 04 பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டு, தேவையான பயிற்சி வழங்கப்பட்டது.

2025-ஆம் ஆண்டு காலப்பகுதியில் திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்துக்கான காசுத் திட்டமிடல் தொகுதியை ஆரம்பிக்கவும் அரச வங்கி இடைமுகங்களை கணினி அமைப்புடன் ஒருங்கிணைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சொத்து மற்றும் பதவியணி முகாமைத்துவத் தொகுதியைச் செயல்படுத்தவும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும், அரச கணக்குகள் திணைக்களத்தின் அதிகாரிகள் சுமார் 7,589 பயனர்களுக்குத் தொடர்ச்சியான ஆதரவு சேவைகளை வழங்கினர்.

**<u>2025-ல் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் விவரங்கள்.</u>**

***முறைமையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்காக, முக்கிய பாடப்பிரிவுகளில் நடத்தப்பட்ட நிகழ்நிலைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.***

| தொடர் இல | இடம் | காலம் | நிறுவனங்கள் | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.01.21 முதல் 2025.01.24 வரை | சிறைச்சாலைகள் திணைக்களம் / விவசாயத் திணைக்களம் | 749 |
| 02 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.03.04 முதல் 2025.03.07 வரை | கல்வி அமைச்சு சமுர்த்தி திணைக்களம் மற்றும் அளவையியல் திணைக்களம் | 1,718 |
| 03 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.05.08 முதல் 2025.05.10 வரை | நீதிமன்ற நிர்வாகம் | 1,784 |
| 04 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.08.12 முதல் 2025.08.15 வரை | வெளிவவகார அமைச்சு - குழு 01 | 218 |
| 05 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.08.18 முதல் 2025.08.21 வரை | வெளிவவகார அமைச்சு - குழு 02 | 199 |
| 06 | அரச கணக்குகள் திணைக்களம். | 2025.08.21 முதல் 2025.08.24 வரை | வெளிவவகார அமைச்சு - குழு 03 | 40 |
| **மொத்தம** | | | | **4708** |

***கொள்முதல் கட்டகைளகள் மற்றும் விலைப்பட்டியல்களைப் பதிவு செய்வது தொடர்பாக 2025-ல் நடத்தப்படும் நிகழ்நிலைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.***

| தொடர் இல | இடம் | காலம் | நிறுவனங்கள் | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அரச கணக்குகள் திணைக்களம | 2025.08.27 (காலை அமர்வு) | சிங்கள மொழி மூலம் - குழு 01 | 984 |
| 02 | அரச கணக்குகள் திணைக்களம் | 27.08.2025 (மாலை அமர்வு) | சிங்கள மொழி மூலம் - குழு 02 | 786 |
| 03 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.08.28 | தமிழ் மொழி மூலம் - குழு 03 | 586 |
| 04 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.09.23 | இலங்கை தரைப்படை | 120 |
| **மொத்தம்** | | | | **2476** |

***முறைமையைப் பயன்படுத்தி நிறுவன அலுவலர்கள் மற்றும் புகையிரத திணைக்கள அலுவலர்கள் மற்றும் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான முக்கிய தொகுதி தொடர்பாக 2025 இல் நடத்தப்பட்ட வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்***

| தொடர் இல | இடம் | காலம் | நிறுவனங்கள் | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.03.18 முதல் 2025.03.21 வரை | இலங்கைப் புகையிரதம் | 20 |
| 02 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.03.25 முதல் 2025.03.28 வரை | இலங்கைப் புகையிரதம் | 10 |
| 03 | அரச கணக்குகள் திணைக்களம் | 2025.03.25 முதல் 2025.03.28 வரை | சிறைச்சாலைத் திணைக்களம் | 10 |
| 04 | விமானப் படைத் தலைமையகம் | 2025.09.19 | இலங்கை விமானப் படை | 70 |
| 05 | நுவரெலியா மாவட்ட செயலகம் | 2025.11.10 முதல் 2025.11.13 வரை | நுவரெலியா மாவட்ட செயலகம் | 52 |
| **மொத்தம்** | | | | **162** |

## 2.3 நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்கியல் கொள்கை

### அரச நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் வழிகாட்டுதல்களை வெளியிடுதல்

அறிக்கையிடும் காலப் பகுதிக்குள் 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களை தயாரித்து உரிய திகதியில் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் உரிய பதில்களை தயாரித்து உரிய திகதிக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக, 2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுக்கு உரிய நிதி செயலாற்றுகை பற்றிய அறிக்கையை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் பொது மக்கள் அணுகலை மேம்படுத்துவதற்காக அறிக்கை அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கணக்கியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, வரவு செலவுத் திட்ட அலகுகளுக்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. மேலும், 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதை எளிதாக்கும் வகையில், வரவு செலவுத் திட்ட நிறுவனங்களுக்கு வருடாந்த கணக்குகளை முடிப்பது மற்றும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன.

**<u>நிதி அறிக்கையிடலை வலுப்படுத்துவதற்கும் சீர்திருத்தங்களை எளிதாக்குவதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.</u>**

கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, திரட்டல் அடிப்படையிலான கணக்கீட்டு முறைக்கு மாறுவதற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்காக, பொது நிதி கணக்காளர்கள் சங்கத்தின் (APFA) உறுப்பினர்களுக்கும் அரச கணக்குகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

பொது நிதி கணக்காளர்கள் சங்கத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசாங்கத்தின் நிதி அறிக்கையிடலை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கவும், திரட்டல் அடிப்படையிலான கணக்கீட்டு முறைக்கு மாறுவதைக் கண்காணிக்கவும் ஒரு உயர் அதிகார வழிகாட்டல் குழு அமைக்கப்பட்டது. முக்கிய கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப சவால்களை விவாதிப்பதற்காக, இக்குழுவின் மூன்று கூட்டங்கள் 2025 மே 19, 2025 ஜூன் 23 மற்றும் 2025 நவம்பர் 21 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

சீர்திருத்த செயல்முறைக்கு ஆதரவளிப்பதற்காக பின்னர் ஒரு பணிக்குழு நியமிக்கப்பட்டது. அந்த ஆண்டில், பணிக்குழு பின்வரும் முக்கியப் பணிகளை நிறைவு செய்தது:

- எதிர் கணக்குகளை நீக்குவது தொடர்பான இறுதி அறிக்கை.
- நிதி சாரா சொத்துக்களுக்கான கணக்கியல் கொள்கையின் வரைவு.
- திரட்டு கணக்கீட்டுக்கு மாறுவதற்கான செயல் திட்டத்தின் வரைவு.
- அமைச்சரவைப் பத்திர வரைவு.

வழங்கப்பட வேண்டிய அனைத்துப் பணிகளுக்கும் உயர்மட்ட வழிகாட்டுதல் குழுவிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது.

## 2024-ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் வரைவு நிதி ஒழுங்குமுறைகளைத் தயாரித்தல்.

அரச கணக்குகள் திணைக்களம் தொடர்பான வரைவு நிதி ஒழுங்குமுறைகள் 2024-ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கு இணங்கத் தயாரிக்கப்பட்டன. இந்த அறிக்கைக் காலத்தில், வரைவு ஒழுங்குமுறைகளை மேலும் செம்மைப்படுத்தவும், சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அதிகாரிகளுடன் மூன்று கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும் பொதுவான சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், பகிரங்க நிதி முகாமைத்துவச் செயல்பாடுகள் முழுவதும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், பொது நிதித் திணைக்களம், திறைசேரிச் செயல்பாடுகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத் திணைக்களம் ஆகியவற்றுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

## பகிரங்க நிதி முகாமைத்துவ சீர்திருத்த செயற்பாட்டு திட்டத்தைத் தயாரித்தல்

அரச கணக்குகள் திணைக்களத்துக்கு பொருத்தமான ஒரு பகிரங்க நிதி முகாமைத்துவ சீர்திருத்த செயற்பாட்டு திட்டம் இந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது. பகிரங்க நிதி முகாமைத்துவ அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான முன்னுரிமை சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் செயல்படுத்தும் காலக்கெடுவை சுட்டிக் காட்டும் இந்த செயல் திட்டத்தை இறுதி செய்வதற்காக, IMF அதிகாரிகளுடன் இரண்டு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

## கணக்கு அட்டவணையைத் தயாரித்தல்

நியமிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு கணக்கு அட்டவணையைத் தயாரிப்பதில் ஆதரவளிப்பதற்காக, இந்த ஆண்டில் இரண்டு IMF தொழில்நுட்ப உதவிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜூலை 14 முதல் 25 வரையிலும், டிசம்பர் 8 முதல் 12 வரையிலும் நடைபெற்ற இந்தப் பணிகள் பொருளாதாரப் பிரிவு மற்றும் நிகழ்ச்சித் திட்டம்/ செயல்திட்டப் பிரிவின் மேம்பாட்டிற்கு தொழில்நுட்ப உதவி வழங்குவதிலும், நிதி, அமைப்பு மற்றும் அமைவிடப் பிரிவுகளை மீளாய்வு செய்வதிலும் கவனம் செலுத்தின.

டிசம்பர் பணியமர்வின் போது, ஒவ்வொரு அமைச்சின் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் துல்லியமாக அடையாளம் கண்டு வகைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில், அனைத்து அமைச்சுக்களுடனும் பிரத்தியேக அமர்வுகள் நடத்தப்பட்டன.

அதன்படி, அரச கணக்குகள் திணைக்களத்தின் தலைமையிலான பணிக்குழுவால், கணக்கு அட்டவணையின் பொருளாதாரப் பகுதியைத் தயாரிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டப் பகுதிகளைத் தயாரிப்பதற்காக, தேசிய வரவு செலவுத் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

**பிரதான பேரேட்டுக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரித்தல்**

மொத்தம் 7 முதன்மைப் பேரேட்டுக் கணக்குகளும் 109 துணைப் பேரேட்டுக் கணக்குகளும் தொடங்கப்பட்டன. அனைத்து முதன்மைப் பேரேட்டுக் கணக்குகளுக்கும் காலாண்டு சரிபார்ப்புகள் முடிக்கப்பட்டன. புகையிரத திணைக்களத்தின் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தொகைகளைத் தீர்ப்பதற்காகத் தொடர்ச்சியான பின்தொடர்தல்கள் மேற்கொள்ளப்பட்டன, அவை தற்போது முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளன.

## 2.4 சம்பள முறைமைகள்

**அரசாங்க சம்பள மென்பொருள் – ஜிபிஎஸ்**

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கான சம்பளங்களைச் செயற்படுத்தும் அரசாங்க ஊதிய அமைப்பை (ஜிபிஎஸ்) பராமரித்தல், கண்காணித்தல் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய பொறுப்புகளை அரச கணக்குகள் திணைக்களம் கொண்டுள்ளது. இந்த ஆண்டில், ஜிபிஎஸ்-ஐப் பயன்படுத்தி சம்பளம் தயாரிப்பதில் எழும் சிக்கல்களைத் தீர்ப்பது, அரச நிறுவனங்களின் கோரிக்கையின்படி ஜிபிஎஸ் நகல்களை வழங்குவது மற்றும் புதுப்பிப்பது, மற்றும் ஜிபிஎஸ் தொடர்பான பயிற்சித் திட்டங்களை நடத்துவது போன்ற ஆதரவு சேவைகளை இத்திணைக்களம் வழங்கியுள்ளது.

ஆண்டு காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| செயற்பாடு | இலக்கம் |
|---|---|
| வெளியிடப்பட்ட புதிய GPS பிரதிகளின் எண்ணிக்கை | 36 |
| இற்றைப்படுத்தப்பட்ட GPS பிரதிகளின் எண்ணிக்கை | 56 |
| நடாத்தப்பட்ட GPS பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 04 |
| பயிற்றப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | 103 |

**புதிய e-payroll நிகழ்ச்சித் திட்டம்**

தற்போது தொழிற்படுகின்ற அரசாங்கத்தின் சம்பள மென்பொருளில் காணப்படுகின்ற குறைபாடுகளை குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன், அரச கணக்குகள் திணைக்களமானது, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) ஆகியவற்றுடன் கூட்டிணைப்பினை மேற்கொண்டு புதிய e-payroll நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தப் புதிய முறைமை நிதி அமைச்சிலும் 15 திறைசேரி திணைக்களங்களினாலும் ஒரு முன்னோடி கருத்திட்டமாக நடைமுறைப் படுத்தப் படுகின்றது.

## 2.5 அரசாங்க நிதியியில் புள்ளிவிபரவியல் (GFS) மற்றும் நிதி சாரா சொத்துக் கணக்கீடு.

**மத்திய அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டை ஒருங்கிணைத்தல் மற்றும் கணக்கீட்டில் உதவுதல்.**

ஆண்டு காலப்பகுதியில் அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான 651 மதிப்பீட்டு அறிக்கைகள் அரச கணக்குத் திணைக்களத்தால் பெறப்பட்டு, அவற்றின் மதிப்புகளுக்குக் கணக்குக் காட்டுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இதற்காக, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை கணக்கிடும் செயல்பாட்டில் ரூ. 4,002.7 பில்லியன் மதிப்பிலான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.



காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான மதிப்பீடு மற்றும் கணக்கீட்டு திட்டத்தின் கீழ், தனிப்பட்ட அரச நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் நோக்கில், 3 வடிவமைப்புக்களைப் பயன்படுத்தி காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, 88 அரச நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி தங்களது தகவல்களை அனுப்பியுள்ளன.

அரச நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை ஆய்வு செய்த பின்னர், மதிப்பீடு மற்றும் கணக்கீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் தங்களது கணக்குப் புத்தகங்களில் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அந்த மதிப்பீடுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<u>2014 கையேட்டின் பிரகாரம் அரசாங்க நிதியியல் புள்ளிவிவரங்களைத் (GFS) தொகுத்தல்.</u>**

ஆண்டு காலப்பகுதியில் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மத்திய அரசாங்கத்திற்கான அரசாங்க நிதிப் புள்ளிவிவரங்கள் (GFS) தொகுக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகளுக்காக அரசிறைக் கொள்கைத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அரசாங்க நிதிப் புள்ளிவிவரங்களில் உள்ள வருமானம் மற்றும் செலவினப் புள்ளிவிவரங்களுக்கான இணக்கபபாடுகள் தயாரிக்கப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மேலதிக வரவு செலவுத் திட்ட நிறுவனங்களின் மாதிரியிலிருந்து நிதித் தகவல்களைச் சேகரித்து அரசாங்க நிதிப் புள்ளிவிவரங்கள் (GFS) தொகுக்கப்பட்டன.

அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் நிதித் தகவல்களைச் சேகரித்து, 2024 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் அரசாங்க நிதிப் புள்ளிவிவரங்கள் (GFS) தயாரிக்கப்பட்டன.

**<u>பாராளுமன்ற பொது கணக்கு குழுவில் பங்கேற்று, அது தொடர்பான செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.</u>**

2025 ஆம் ஆண்டிற்காக பொதுக் கணக்குகளுக்கான குழுவின் (COPA) பதினான்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும் திறைசேரி அறிக்கைக்கான தொடர்புடைய கணக்கியல் அறிக்கைகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பொதுக் கணக்குகளுக்கான குழுவின் (COPA) கூட்டங்களில் எழுப்பப்பட்ட சிக்கல்களைத் தீர்க்க, அக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இத்திணைக்கள அதிகாரிகளின் தொழில்முறை அறிவு உதவியது.

**<u>மாகாண சபைகளின் மாதாந்த நிதித் தகவல்களை ஒருங்கிணைத்து அறிக்கை தயாரித்தல்.</u>**

அரசாங்க நிதிநிலை அறிக்கைகளில் சேர்ப்பதற்காக, அனைத்து மாகாண சபைகளின் நிதித் தகவல்களையும் சேகரித்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.6 வைப்புக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு.

**அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் “பி” கணக்கு நடவடிக்கைகள்.**

திணைக்களம் சார் பதிவுகளுக்கும் திறைசேரிப் பதிவுகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருந்த இருபத்தாறு (26) நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, இந்த வேறுபாடுகளைச் சரிசெய்யத் தேவையான தொழில்நுட்ப உதவியும் வழிகாட்டுதலும் வழங்கப்பட்டன.

நிலுவையில் உள்ள கடன் தொகைகளின் வயதுப் பகுப்பாய்வின் அடிப்படையில், முற்பண “பி” கணக்குகள் தொடர்பாக 121 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், முற்பண “பி” கணக்குகள் தொடர்பான பிற சிக்கல்களைத் தீர்க்கவும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2024.12.31 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான முற்பண “பி” கணக்குகளின் நிதிநிலை அறிக்கைகளின்படி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களை வரவழைத்து, 10 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கடன் தொகைகளை வசூலிக்க அல்லது தள்ளுபடி செய்ய வழிகாட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அதிகபட்ச நிலுவைக் கடன் தொகைகளைக் கொண்ட இரண்டு நிறுவனங்கள் வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டன.

**பொது வைப்புக் கணக்கு**

இந்த ஆண்டில், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வைப்புக் கணக்குகளின் சரிபார்ப்பு அறிக்கைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், 2024-ஆம் ஆண்டிற்கான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அனைத்து 170 வைப்புக் கணக்குகளும் 2025-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சரிபார்க்கப்பட்டன. சரிபார்க்கப்படாத நிலுவைகளுக்குப் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள தொகைகளைத் தீர்ப்பது தொடர்பாக 35 நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், நாற்பது புதிய பொது வைப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன, மேலும் 14 செயலற்ற வைப்புக் கணக்குகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

அமைச்சின் செலவினத் தலைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, வைப்புக் கணக்குகளை சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கான கோரிக்கைகள் பெறப்பட்டன. அதன்படி, 8 அமைச்சுக்களுக்குச் சொந்தமான 23 வைப்புக் கணக்குகள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு மாற்றப்பட்டன.

## பிற அரசாங்கங்களின் சார்பாக ஓய்வூதியங்களை வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முன்பணக் கணக்கு

இந்தக் கணக்கு, வெளிநாட்டு அரசாங்கங்களில் (சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐக்கிய இராச்சியம்) பணியாற்றி, அந்த அரசாங்கங்களிடமிருந்து ஓய்வூதியம் பெறும், இலங்கையில் வசிக்கும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காகப் பராமரிக்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டில், இந்த முற்பணக் கணக்கின் கீழ் ஐந்து விதவைகளுக்கு விதவை ஓய்வூதியமாக ரூ. 568,469 வழங்கப்பட்டது. மேலும், 2024 ஆம் ஆண்டிற்குத் திருப்பிச் செலுத்தப்படாத அனைத்து நிலுவைத் தொகைகளையும் சேர்த்து, ரூ. 615,903 திருப்பிச் செலுத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் உள்ள தொகையான ரூ. 265,320, 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் திருப்பிச் செலுத்தப்படும்.

## திறைசேரி நானாவித முற்பணக் கணக்கு

இந்தக் கணக்கு, அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் அவசர மற்றும் எதிர்பாராத செலவினத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முற்பணம் வழங்கவும், நிதி ஒழுங்குமுறை 106-இன் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அறிவிக்கப்பட்ட பொது நிதி இழப்புகளை ஈடுசெய்வதற்காக முற்பணம் வழங்கவும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் கணக்கின் கீழ் முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட முற்பணங்களின் நிலுவைத் தொகை 2025.01.01 ஆம் திகதியின் படி ரூ. 131,217,651 ஆகும். அதில், ரூ. 4,218,037 இந்த ஆண்டில் தீர்க்கப்பட்டது.

நிலுவையில் உள்ள தொகைகளை வசூலிக்கத் தேவையான வழிகாட்டுதலையும் உதவியையும் வழங்கி, பொறுப்பான நிறுவனங்களுடன் தொடர்ச்சியான பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, முற்பணங்களைத் தீர்க்க வேண்டிய பொறுப்பான நிறுவனங்களுடன் 2025 ஆம் ஆண்டில் நான்கு (04) கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிலுவையில் உள்ள கடன் தொகைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பதற்காக, திறைசேரியின் பிரதி செயலாளரால் ஒரு குழு நியமிக்கப்பட்டது, மேலும் அக்குழு இவ்விடயத்தை தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

## அரச சேவை பரஸ்பர பிணையாளர் சங்கம்

1947 செப்டம்பர் 24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 9773 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் பரஸ்பர பிணையாளர் சங்கம் நிதி ஒழுங்குவிதி இலக்கம் 880-893 இன் மூலமும் அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பு கட்டளையின் 612 ஆவது அதிகாரத்தின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேவைப்பாட்டின்படி பேணப்பட்டு வருகின்றது. பிணை வைக்க வேண்டிய

அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வினைத்திறனுடனும் முறையாகவும் பேணிவருதல் சங்கத்தின் நோக்கமாகும்.

2025 ஆம் ஆண்டில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக சங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 64 விண்ணப்பங்கள் முகாமைத்துவ சபையின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது அதன் பிரகாரம் உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆண்டுகாலப் பகுதியில் அங்கத்துவக் கட்டணமாக ரூபா 56,125 அறவிடப்பட்டுள்ளது.




2025.12.31 நிலவரப்படி, சங்கத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 5,380ஆக இருந்தது. பாதுகாப்பு வழங்க வேண்டிய பெரும்பாலான அரச அதிகாரிகள் ஏற்கனவே உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளனர். எனவே, முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, 2025-ல் வழங்கப்படும் புதிய உறுப்பினர் சேர்க்கைகளின் எண்ணிக்கை குறைந்து வரும் போக்கைக் காட்டுகிறது.

உறுப்பினர் சேர்க்கை விவரங்கள், பெறப்பட்ட உறுப்பினர் பங்களிப்புகள், பங்களிப்புத் திருப்பியளிப்புகள் மற்றும் பிற உறுப்பினர் தகவல்களைக் கொண்ட தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.



டப்ளியு.ஏ. சமந்த உபநந்த
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

# அத்தியாயம் 03 - 2024 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று.

ஏசீஏ- எப்

## 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 144,677,750 | 292,514,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 138,968 | 864,208 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 11,653,464 | 7,859,738 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 35,793,371 | 41,674 | குறிப்பு 8 |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 192,263,553 | 301,279,620 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 192,263,553 | 301,279,620 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 35,783,202 | 13,922,500 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 156,480,350 | 287,357,120 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | - | - | |
| 108,800,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 107,419,216 | 90,683,514 | ஏசீஏ-2(ii) |
| 26,850,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 22,802,728 | 24,939,800 | ஏசீஏ-2(ii) |
| 1,450,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 899,460 | 1,234,139 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 137,100,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 131,121,403 | 116,857,453 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 1,295,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 1,140,143 | 432,676 | ஏசீஏ-2(ii) |
| 123,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 2,770,603 | 19,346,852 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | திறன் விருத்தி | 14 | 891,236 | 1,422,506 | ஏசீஏ-2(ii) |
| 4,205,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| 131,500,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 4,801,981 | 21,202,034 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 138,993 | 1,119,768 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 10,082,652 | 10,268,309 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | 2,663,005 | 142,201,020 | குறிப்பு 9 |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 12,884,651 | 153,589,097 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 148,808,035 | 291,648,584 | |
| 268,600,000 | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 7,672,315 | (4,291,464) | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | 7,672,315 | (4,291,464) | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | - | ஏசீஏ-3 |
| | | | 7,672,315 | (4,291,464) | |

39

I.P.N.A. Pathmasekara
Deputy Director (Finance)
Department of State Accounts

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | உண்மை நிலை 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 64,933,805 | 62,546,742 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5 | 145,488,055 | 147,058,867 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **210,421,860** | **209,605,609** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 145,488,055 | 147,058,842 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 64,933,805 | 62,546,742 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | 25 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **210,421,860** | **209,605,609** |

பக்க இலக்கம் 46 முதல் 66 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 67 முதல் 76 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ................................ | ................................ | ................................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்.'. பிரதான கணக்காளர.'.பணிப்பாளர்(நிதி).'. ஆணையாளர்(நிதி) |
| பெயர்: கலாநிதி ஹர்ஷனா சூரியப்பெரும | பெயர்: டபிள்யூ.ஏ. எஸ் .உபநந்த | பெயர் : ஐ. பி. என். பத்மசேகர |
| பதவி : செயலாளர் நிதி அமைச்சகம் | பதவி : பணிப்பாளர் நாயகம் | பதவி: துணை பணிப்பாளர்(நிதி) |
| திகதி : 2026.02-25 | திகதி : 2026.02. 20 | திகதி : 2026.02.20 |
| Dr. Harshana Suriyapperuma<br>Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Planning and Economic Development<br>Ministry of Finance<br>Colombo 01 | W.A. Samantha Upananda<br>Director General<br>Department of State Accounts<br>General Treasury<br>Colombo 01 | I.P.N.A. Pathmasekara<br>Deputy Director (Finance)<br>Department of State Accounts<br>General Treasury<br>Colombo 01 |

40

## 3.4 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- 8

## 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | | உண்மை | |
|---|---|---|---|
| | | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | | - | - |
| இலாபம் | | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | | 5,976,758 | 4,764,287 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | | 35,793,371 | 41,674 |
| ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 144,677,750 | 292,514,000 |
| முற்பணங்களை அறவிடல் | | 8,451,067 | 8,134,984 |
| வைப்புக்களின் பெறுகை | | 138,968 | 864,208 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | | 195,037,913 | 306,319,154 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | | 129,471,993 | 114,793,139 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | | 899,460 | 1,234,139 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்புக மூலதன மாற்றங்களக திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | | 2,031,378 | 1,855,182 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | | 11,222,375 | 2,027,094 |
| மூலதன சொத்து நிர்மாணம்ள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டு கையகப்படுத்துதல்கள் | | 2,663,005 | 142,201,020 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | | 35,783,202 | 13,922,500 |
| முற்பணக் கொடுப்பனவு | | 10,056,903 | 9,819,458 |
| வைப்புக் கொடுப்பனவு | | 138,993 | 1,119,768 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | | 192,267,310 | 286,972,301 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | | 2,770,603 | 19,346,852 |
| **ரமகலீட்டு செயாபாடுகளிருங்கான காசுப் பாய்ச்சல்** | | | |
| வட்டி | | - | - |
| பங்கு இலாபம் | | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | | - | - |
| | | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | | |
| மூலதனம் செலவினம் | | 2,770,603 | 19,346,852 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | | 2,770,603 | 19,346,852 |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | | (2,770,603) | (19,346,852) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| உள்ளூர்க் கடன்கள் | | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | | - | - |
| பெற்ற நன்கொடைகள் | | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | | - | - |
| ***கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ) | | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | 41 | - | - |

I.P.N.A. Pathm…
Deputy Director
Department of St… …'s
General Treas…

## 3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **நிதி கூற்றுக்கள் தயார்படுத்தலின் அடிப்படை**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

I.P.N.A. Pathmasekara
Deputy Director (Finance)
Department of State Accounts
General Treasury
Colombo 01

44

8) **பிற பிரதான லெஜர் பெறுவனவு**

| | | | |
|---|---|---|---|
| I | பிற அரசாங்கங்களுக்காக கொடுப்பனவிற்காக அனுமதிக்கப்பட்ட முற்பண கணக்கின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஓய்வூதிய கொடுப்பனவு மீளளிப்பின்போது இடம்பெறுகின்ற செலாவணி இலாபம் 8029 கணக்கின் கீழ் கணக்கு வைத்தல். | = | 10,169 |
| II | அரச பிரதிநிதிகளுக்கு நிதி மாற்றலுக்குரித்தாக கணக்கு பொழிப்பின் ஊடாக மாதாந்தம் 8028 கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது | | 35,783,202 |
| | | | 35,793,371 |

9) **பிற பிரதான லெஜர் கொடுப்பனவு**

| | | | |
|---|---|---|---|
| I | பிற அரசாங்கங்களுக்காக கொடுப்பனவிற்காக அனுமதிக்கப்பட்ட முற்பணகணக்கின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஓய்வூதிய கொடுப்பனவு மீளளிப்பின்போது இடம்பெறுகின்ற செலாவணி இலாபம் 8029 கணக்கின் கீழ் கணக்கு வைத்தல். | = | 10,749 |
| II | அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கத்திற்கான வரி செலுத்துதல்கள் தொடர்பான மாதாந்த கணக்கு சுருக்கம் மூலம் கணக்கு 8013 இல் பற்று வைக்கப்பட்ட மொத்த தொகை | = | 2,652,256 |
| | | | 2,663,005 |

I.P.N.A. Pathmasekara
Deputy Director (Finance)
Department of State Accounts
General Treasury
Colombo 01

45

## 3.6 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை.

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக % |
| | | | | | |
| ஏற்புடையதல்ல | | | | | |
| | | | | | |

## 3.7 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| மீண்டெழும் | 130,500,000.00 | 137,100,000.00 | 131,121,403.28 | 95.63% |
| மூலதனம் | 131,500,000.00 | 131,500,000.00 | 4,801,981.40 | 3.65% |

## 3.8 நி.ஓ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுகளின் /திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

| தொடர் இலக்கம் | ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | தேர்ததல் ஆணைக்குழு | ** | 496,189.98 | 496,189.98 | 496,189.98 | 100% |
| 02 | நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | *** | 11,200,000.00 | 11,200,000.00 | 10,726,185.25 | 96% |

உள்ளூராட்சித் தேர்தல்களில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கான படிகளைத் திரும்பச் செலுத்துதல்.

(ITMIS) அமைப்புக்கான இணைய இணைப்பு தொடர்பான செலவினம்

## 3.9 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

| ஆதனக் குறியீடு | குறியீட்டின் விபரம் | 2025.12.31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுச் சபை அறிக்கைக்கு அமைவாக நிலுவை | 2025.12.31 இல் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை | கணக்கீடு செய்யப்பட உள்ளவை | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | | | |
| **9152** | இயந்திரசாதனம் | 64,933,805.06 | 64,933,805.06 | | |
| **9153** | காணி | - | | | |
| **9154** | அருவமான சொத்துக்கள் | - | | | |
| **9155** | உயிரியல் சொத்துக்கள் | - | | | |
| **9160** | நடைபெறும் பணிகள் | - | | | |
| **9180** | குத்தகை சொத்துக்கள் | - | | | |

## 3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } ටීපීඩී/ඒ/ඩීඑස්ඒ/එෆ්ඒ/2025/13    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2026 මැයි 31 දින

15 JUN 2026

ගණන්දීමේ නිලධාරී

රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

**ශීර්ෂය -250 රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුවේ 2025 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව**

**1. මූල්‍ය ප්‍රකාශන**

**1.1 මතය**

